International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தொல்காப்பியப் பொருளதிகார புறனடை நூற்பாக்களில் உரையாசிரியர்களின் மறுப்பும் மாற்றும்

**கு. ஜெயந்தி**
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்

**முனைவர் சு. இராசாராம்**
மூத்த பேராசிரியர் மற்றும் தலைவர்
நெறியாளர், தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி – 03

## முன்னுரை

தமிழில் உள்ள இலக்கணங்கள் அனைத்திற்கும் முன்னோடியாய் விளங்குவது தொல்காப்பியம் ஆகும். அங்ஙனம் இலக்கணத்தோடு இலக்கியத்தையும் ஒருங்கே பெற்ற நூல் தொல்காப்பியப் பொருளதிகாரம். அத்தகு சிறப்பு கொண்ட இந்நூலில் புறனடை நூற்பாக்கள் ஒவ்வொரு இயலுக்குள்ளும் காணப்படுகின்றன. அந்நூற்பாக்களின் உரைகளுக்கு இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் மற்றும் தற்கால உரையாசிரியர்களின் வேறுபட்ட அணுகுமுறைகளை ஆராய்ந்து அறிவதாக இக்கட்டுரை அமைகிறது.

## உரையாசிரியர்கள்

பாடல் வடிவில் எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்களில் உள்ள பொருளை அனைவரும் எளிமையாக புரிந்துகொள்ளும் வண்ணம் உரைவடிவில் விரிந்து எழுதியவர்கள் உரையாசிரியர்கள் என்பதனை மு.அருணாச்சலம், **“பழைய இலக்கிய இலக்கணங்கள், இன்றைய பொதுமாந்தர் புரிந்து கொள்ளும் எல்லைக்கு அப்பாற் போய் விட்டவை. அப்படியே மொழியை உணர்ந்து கொண்டாலும், மொழியில் அடங்கிய நோக்கங்களையும் மரபுகளையும் குறிப்புகளையும் முற்ற உணர்ந்து கொள்வது மிகக் கடினம். இக்கடின நிலையை மாற்றி, பண்டைய நூல்களை எளிதாக உணர்ந்து கொள்ள வழி அமைத்தவர்கள் பண்டைய உரையாசிரியர்கள்”**[1] என்று கூறுகின்றார்.

## புறனடை விளக்கம்

புறனடை என்பதற்கு விளக்கம் கூறுகையில், **“புறன்+அடை=புறனடை, புறத்து அடையாய் வந்தது; புறம்+நடை=புறநடை, வேறு விதமாகிய நடக்கை எனினும் பொருந்தும்”**[2] என்று நன்னூல் காண்டிகை உரையாசிரியர் குறிப்பிடுகின்றார்.

## பாசறைப் பிரிவு

பாசறைப் பிரிவு என்பது போரின் நிமித்தமாக தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து செல்வது ஆகும். அங்ஙனம் பாசறையின் கண் தலைவியுடன் புணர்தல் இல்லை என்பதனை,

**“எண்ணரும் பாசறை பெண்ணொரும் புணரார்”** (தொல்.பொருள்.இளம்.நூற்.173)

என்ற நூற்பாவிற்கு உரை கூறுகையில் தலைவன் போர்க்கருதி பாசறையில் தங்கும் சூழலில்

தலைவியை உடன் அழைத்துச் செல்வதில்லை என முதலில் கூறிவிட்டு பிறகு அங்குள்ள தாசியர், கணிகைகளோடு புணர்ச்சியில் ஈடுபடுவான் என்பதனை அடுத்த நூற்பாவில் புறநடையாக கூறிச் சென்றனர் என்பதனை,

"**புறத்தோர் அங்கண் புணர்வதாகும்**" (தொல்.பொருள்.இளம். நூற்.174)

என்ற நூற்பாவிற்கு இளம்பூரணர், "**மேற்சொல்லப் பட்ட பாசறைக்குப் புறப்பெண்டிர் புணர்ச்சி பொருந்துவது உண்டு**"[3] என்கிறார். இதற்கு நச்சினார்க்கினியர் உரை கூறுகையில், "**அடியோரும் வினைவளர் பாங்கினோருமாகிய அகப்புறத் தலைவனுடைய பாசறையிடத்தில் அவாப்பெண்ணோடு புணர்த்தப் புலனெறி வழக்கஞ்செய்தல் பொருந்துவது**"[4] என்கிறார். மேலும் இதே நூற்பாவிற்கு ஆ.சிவலிங்கனார் உரை கூறுகையில்,

**அகவொழுக்கத்திற்குரியரல்லாதர் பாசறையின்கண் அழைத்துச் செல்லுதலும்**[5] உண்டு என்று குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு முதல் உரையாசிரியரான இளம்பூரணர் கருத்தினை நச்சினார்க்கினியர் கூறி இருந்தாலும் பாசறையின்கண் பெண்ணுடன் புணர்வது என்பது சிறந்த வீரர்க்கு இழுக்காகும் எனத் தன்னுடைய கருத்தை மறைமுகமாக கூறிச் சென்றிருப்பதனை இப்புறநனடை நூற்பாக்களே வெளிப்படுத்துகின்றன.

**ஆண்மை பெயர்க்கு உரிய பெயர்கள்**

ஆண்மை பெயருக்கு உரியவை இவையெனத் தொல்காப்பியர் மரபியலில் இலக்கணம் வகுத்துள்ளார். இதனை,

"**இரலையும் கலையும் புல்வாய்க் குரிய**"

(தொல்.பொருள்.ஆரா.காண்.பால.நூற்.600)

எனும் நூற்பாவில் புல்வாய் இனத்துள் இரலை, கலை, என்னும் ஆண்மைப்பெயர்கள் ஆண் விலங்குகளுக்கு உரியவையாக கூறி அதற்கு பறநடையாக,

"**கலையென் காட்சி உழைக்கும் உரித்தே**
**நிலையிற் றப்பெயர் முசுவின் கண்ணும்**"

(தொல்.பொருள்.ஆரா.காண்.பால.நூற்.601)

என்ற நூற்பாவைச் சுட்டுகிறார். இதற்கு பேராசிரியர், "**இரலை, கலை என்பவற்றுள் கலை என்னும் சொல்லினது தோற்றம் பெண்பாலாகிய உழைக்கும் உரித்தாகும். அப்பெயர் முசுவிற்கும் நிலைப்பெற்றதாகும்**"[2] என ஆண்மைப்பெயரை பெண்பாலுக்கும் உரியவையாக புறனடை நூற் பாக்களின் வாயிலாகவே கூறிச் சென்றுள்ளனர் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

**அந்தணர்க்கு சிறப்பு மரபு உணர்த்துதல்**

அந்தணர்க்கு சிறப்பு மரபுக் கூறுதலில் அரசர் பகை முடித்தல் காரணமாக அவருடைய மகன் இளையவனாக இருக்கும் சூழலில் அரசர்க்குரிய நிலையில் இருந்து அந்தணர்கள் முடிவுகளை எடுக்கலாம் என்பதை மரபாகக் கூறி பிறகு அதற்குப் புறனடையாக,

"**வில்லும் வேலும் கழலும் கண்ணியும்**
**தாரும் மாலையும் தேரும் வாளும்**
**மன்பெறு மரபின் ஏனோர்க்கும் உரிய**"

(தொல்.பொருள்.ஆரா.காண்.சா.பால..நூற்.638)

என்ற நூற்பாவைச் சுட்டுகின்றனர். இதனை சா.பாலசுந்தரம் கூறுகையில், "'**அந்தணர்க்கு வரைவின்றே**'(மர.81) **என்றதனான் 'மகன்பெறு மரபின்' என்பதற்கு நாடாளும் பொறுப்பினை பெறும் மரபினான் எனப் பொருள் கொண்டு அந்தணர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றாலும் கூட அரசர்க்குரிய குடையும் முடியும் அரியணைகளை யும் தவிர்த்தல் மரபாகும்**"[7] என்று கூறி மேலும் இதற்குப் புறனடையாக,

"**அன்ன ராயினும் இழிந்தோர்க் கில்லை**"

(தொல்.பொருள்.ஆரா.காண்.சா.பால..நூற்.639)

என்ற நூற்பாவை சுட்டுகின்றார் இதற்குப் பேராசிரியர் உரை கூறுகையில், "**மன்னவர் போலுஞ் செல்வந்தாராகிய இழிகுலத்தோர் நாடாண்டாராயினும் அவர்க்கு இவை கூறலமையாது**"[8] என்று கூறுகின்றார். இதே நூற்பாவிற்கு ச.பாலசைந்தரம் தனது ஆராய்ச்சி காண்டிகையுரையில் "**அந்தணர் முதலிய நாற்பாலராயினும் வேந்துவிடு தொழிலின் வாய்ந்தனராயினும் மன்பெறு மரபின் ஏனோ ராயினும் அவரவர்தம்**

குடிமைப்பற்றியும் குலம் பற்றியும் அவரவர்க்கு ஓதிய அறநெறி ஒழுக்கங் களினின்று வழுவி இழிந்தாராயின் அவர்க்கு மேற்சொல்லப் பெற்ற மரபுகளைச் சார்த்திக் கூறுதல் நூலோர் வழக்கில்லை எனவும் 'நான்கு குலத்திலும் இழிந்த மாந்தர்க்கு அவை உளவாகக் கூறப்படா வென்றவாறு' என இளம்பூரணர் அடியொட்டியே உரை கூறுகின்றார். ஆனால் பேராசிரியர் கூறிய அரசர் வைசியரின்றிக் கீழ் அமையாது என்பதும் இவை தமிழ் நெறி மரபிற்கொவ்வாதனவும் சூத்திரச் சொற்கிடைக் கைக்கு ஏலாமையை அறிக"[9] என ச.பாலசுந்தரம் பேராசிரியரை மறுத்துக் கூறுவதன் வழி அறிய முடிகிறது

**பொதுமெய்ப்பாடுகளின் தொகையும் வகையும்**

இயற்றமிழ் செய்யுளுக்குரிய பொது மெய்ப்பாடு களின் தொகையும் வகையும் கூறுகையில் உரையாசிரியர்களிடையே பெறும் மாறுபாடுகள் தோன்றியிருப்பதை மெய்ப்பாட்டியலில் உள்ள புறநடை நூற்பாக்களின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. இதனை,

**பண்ணைத தோன்றிய எண்ணான்கு பொருளும்**

**கண்ணிய புறனே நானான் கென்ப**

(தொல்.பொருள்.இளம்.நூற்.245)

என்ற நூற்பாவிற்கு உரை கூறிய இளம்பூரணர், **"முப்பத்திரண்டு பொருளையுங் குறித்ததன் புறத்து நிகழும் பொருள் பதினாறு"**[10] என்று முதலில் கூறி அதற்கு புறனடையாக,

**"நாலிரண் டாகும் பாலுமா ருண்டே"**

(தொல்.பொருள்.இளம்.நூற்.246)

என்ற நூற்பாவைக் குறிப்பிடுகின்றார். இந்நூற்பா விற்கு உரை கூறிய பேராசிரியரும் பெரும் பான்மை இளம்பூரணரை அடியொட்டியே உரையெழுதிச் செல்கிறார். இதற்கு சோமசுந்தர பாரதியார் உரை கூறுகையில், **"இன, உய்த்துக் கொண்டுணர்தல் இரட்டுற மொழிதல் எனும் உத்திகளால் இச்சூத்திரத்துக்குப் பிறிதும் ஒருபொருள் கொள்ளுதல் பொருந்தும். இதில் 'நாலிரண்டு' என்பதை உம்மை தொக்க கூட்டெண்ணாக்கி, நாலுமிரண்டுமெனக்கூட்டி, அறுவகைப்படும் இயல்புடைய அகத்துறை மெய்ப்பாடுகளும் உளவெனப் பொருள் கூறி, அவ்வாறும் முறையே 'புகுமுகம் புரிதல் தகுமுறை நான்கே ஒன்றொன மொழிப' எனத் தொடங்கி 'புலம்பிய நான்கே ஆறென மொழிப' என எண்ணி முடிக்கும் மெய்ப்பாட்டுத் தொகை ஆறுமாமென அமைத்துக் கோடறும் தவறாகாது"**[11] என்று மாற்றுரை கூறுகின்றார். இதற்கு ச.பாலசுந்தரம் உரை கூறுகையில், **"'பண்ணை தோன்றிய' என்ற நூற்பாவையும் 'நாலிரண்டு' என்ற நூற்பாவையும் இணைந்து அச்சூத்திரங்களின் பொருள் திரிபின்றி விளங்குதற்கு பொருட்டு ஈண்டுப் பிறன்கோட் கூறல் என்னும் உத்திவகையான் நாடகத் தமிழ் நூலார் கூறும் சுவையின் வகை தொகைகளைக் கூறினார் என அறிக. பிற விளக்கங்களை உவமவியலுரையுட் கூறுதும். இனி, இவ்விரண்டு சூத்திரங்கட்கும் உரையாசிரியரும், பேராசிரியரும் பெரும்பான்மையும் வடமொழி நாடக நூலைத் தழுவி உரைவிளக்கங் கூறிச் சென்றுள்ளனர். நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் மேல்வரும் மெய்ப்பாடுகளைத் தொகுத்துக் கூறுவதாக உரை செய்துள்ளார். பாரதியார் கருத்து நூல் நெறிக்கு ஒவ்வுமாறில்லை"**[12] என இளம்பூரணர், பேராசிரியர் மற்றும் சோமசுந்தர பாரதியாரின் உரைகளை ச.பாலசுந்தரம் மறுத்துக் கூறும் வழி அறிய முடிகிறது.

**முடிவுரை**

இங்ஙனம் இலக்கண விதிகளுக்கு அப்பாற் பட்டவைகளை பொருத்திக் காட்டுவதற்கு பயன்படுத்தப்படும் உத்தி முறைகளில் ஒன்று புறனடை நூற்பாக்கள் ஆகும். அவ்வகையில் தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு உரையெழுதி புகழ்பெற்ற உரையாசிரியர்களான இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், தற்கால உரையாசிரியர்கள் போன்றோர் புறனடை நூற்பாக்களை விளக்குவதற்கும் ஆராய்வதற்கும் பெரிதும் ஈடுபாடுகொண்டனர். ஏனெனில் இலக்கண நூற்பாக்களைக் காட்டிலும் புறனடை நூற்பாக்களுக்கு எழுதிய உரைகளின் மூலமே உரையாசிரியர்களும்

அவர்கள் எழுதிய உரைகளும் மிகவும் சிறப்பு பெற்று பிற்கால மொழி வளர்ச்சிக்கும் உரை வளர்ச்சிக்கும் உறுதுணை புரிந்தன என்பதை இக்கட்டுரையின் வழி எடுத்துரைக்கப்படுகின்றன.

## அடிக்குறிப்பு

1. மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், ப.54.
2. பவணந்தி முனிவர், நன்னூல் காண்டிகை உரை முதற்பாகம் எழுத்திகாரம், ப.20.
3. இளம்பூரணர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம், ப.306.
4. இரா.இளங்குமரனார், வாழ்வியல் விளக்கம், தொல்காப்பியம் பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் -1, ப.246.
5. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பியம் உரை வளம் பொருளதிகாரம், அகத்திணையியல், ப.259.
6. இரா.இளங்குமரனார், வாழ்வியல் விளக்கம், தொல்காப்பியம் பொருளதிகாரம், பேராசிரியம்-2, ப.303.
7. ச.பாலசுந்தரம், தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை, பொருளதிகாரம் – தொகுதி -1, ப.198.
8. இரா.இளங்குமரனார், வாழ்வியல் விளக்கம், தொல்காப்பியம் பொருளதிகாரம், பேராசிரியம் -1, ப.318.
9. ச.பாலசுந்தரம், தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை, பொருளதிகாரம் – தொகுதி -1, ப.199.
10. இளம்பூரணர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம், ப.306.
11. ச.பாலசுந்தரம், தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை, பொருளதிகாரம், தொகுதி – 2, ப.234.

## துணைநூற்பட்டியல்


1. **அரவிந்தன்.மு.வை.,** உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், 8/7, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-600108, பதிப்பு-2019.
2. **ஆறுமுக நாவலர்,** நன்னூல் காண்டிகை உரை-1, எழுத்ததிகாரம், முல்லை நிலையம், சென்னை, பதிப்பு-1994.
3. **இளம்பூரணர் (உ.ஆ),** தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம்3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, இராணிப்பேட்டை, சென்னை-600014 இரண்டாம் பதிப்பு-2006.
4. **இளங்குமரனார்.இரா.,** வாழ்வியல் விளக்கம், தொல்காப்பியம் பொருளதிகாரம்–பேராசிரியம் – 1, தமிழ்மண் பதிப்பகம், 2, சிங்காரவேலர் தெரு, சென்னை -600017, பதிப்பு-2003.
5. **இளங்குமரனார்.இரா.,** வாழ்வியல் விளக்கம், தொல்காப்பியம் பொருளதிகாரம் – பேராசிரியம் – 2, தமிழ்மண் பதிப்பகம், 2, சிங்காரவேலர் தெரு, சென்னை -600017, பதிப்பு-2003.
6. **இளங்குமரனார்.இரா.,** வாழ்வியல் விளக்கம், தொல்காப்பியம் பொருளதிகாரம் -நச்சினார்க்கினியர்-1, தமிழ்மண் பதிப்பகம், 2, சிங்காரவேலர் தெரு, சென்னை -600017, பதிப்பு-2003.
7. **சிவலிங்கனார்.ஆ,** தொல்காப்பியம் உரை வளம் பொருளதிகாரம் – அகத்திணையியல், உலக தமிழாராய்ச்சி நிறுவனம், டி.டி.டி.ஐ., தரமணி, சென்னை – 600118, பதிப்பு – 1991.
8. **சோமசுந்தர பாரதியார்.ச.,** தொல்காப்பியர் பொருட்படலப் புலத்துரை, மெய்ப்பாட்டியல், நாவலர் புத்தக நிலையம், 59-ஏ, மேலாவாணி மூல வீதி, மதுரை–625001, இரண்டாம் பதிப்பு – 1975.
9. **பாலசுந்தரம்.ச.,** தொல்காப்பியம், பொருளதிகாரம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை தொகுதி -1, பெரியார் பல்கலைக்கழகம், சேலம் – 636011, பதிப்பு -2012.
10. **பாலசுந்தரம்.ச,** தொல்காப்பியம், பொருளதி காரம், ஆராய்ச்சிக் காண்டிகையுரை, தொகுதி-2, பெரியார் பல்கலைக்கழகம், சேலம் – 636011, பதிப்பு -2012.